புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்
38, Main Road, Oulgreat, Near KFC Moolakulam, Puducherry-605009,
Cell: 97505 89992,9629620802

PRGI.NO.TNTAM/25/A1635 T/TN/2026/0316/6130/1505

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்
NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor F1 ,7th Street, Nehru Colony, Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 | இதழ்: 259 | 25-03-2026 | புதன் | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி- புதுச்சேரி
Volum 01 | Issue: 259 | 25-03-2026 | Wednesday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy-Puducherry

## மேற்கு ஆசிய போர் பதற்றத்தால் நெருக்கடி: அனைத்துக் கட்சி கூட்டத்துக்கு மத்திய அரசு அழைப்பு

புது டெல்லி: மார்ச்.25–

மேற்கு ஆசியாவில் நிலவும் போர் பதற்றத்தின் தாக்கத்தால் ஏற்பட்டுள்ள நெருக்கடி குறித்து விவாதிக்க, இன்று (மார்ச் 25) மாலை 5 மணிக்கு அனைத்துக் கட்சி கூட்டத்துக்கு மத்திய அரசு அழைப்பு விடுத்துள்ளது.

உலகளாவிய மற்றும் பிராந்திய அளவில் பதற்றம் ஏற்பட்டுள்ள நிலையில், இந்தியாவின் தற்காப்புத் தயார் நிலையை ஆய்வு செய்வதற்காக பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தலைமையில் ஆய்வுக் கூட்டம் இன்று நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் முப்படைத் தளபதி ஜெனரல் அனில் சவுகான், விமானப் படைத் தளபதி ஏர் சீஃப் மார்ஷல் அமர் ப்ரீத் சிங், ஜெனரல் உபேந்திர திவேதி, கடற்படைத் தளபதி அட்மிரல் தினேஷ் கே திரிபாதி, டிஆர்டிஓ அமைப்பின் தலைவர் சமீர் காமத் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மேற்கு ஆசியாவில் நடைபெற்று வரும் மோதல் நான்காவது வாரமாக நீடிக்கிறது. இதனால் ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் மூடியுள்ளதால், எரிபொருள் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, நாடாளுமன்றத்தில் பேசிய பிரதமர் மோடி, "மேற்கு ஆசியாவின் தற்போதைய நிலைமை மிகுந்த கவலையளிக்கிறது. 3 வாரங்களுக்கும் மேலாக பிரச்சினை நீடிக்கிறது. இதனால் சர்வதேச பொருளாதாரம் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது. தற்போதைய போரால் நமது நாட்டில் பல்வேறு சவால்கள் எழுந்துள்ளன.

போரின் எதிர்விளைவாக உலகின் மிக முக்கிய கடல்வழி போக்குவரத்து (ஹார்முஸ் ஜலசந்தி) முடங்கியிருக்கிறது. இதனால் கச்சா எண்ணெய், எரிவாயு போக்குவரத்து மோசமாகப் பாதிக்கப்பட்டு உள்ளது. வளைகுடா நாடுகளில் சுமார் ஒரு கோடி இந்தியர்கள் வசிக்கின்றனர். அவர்களின் பாதுகாப்பில் மத்திய அரசு மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறது. பல்வேறு நாடுகளின் சரக்கு கப்பல்களில் இந்தியர்கள் பெரும்பான்மையாக பணியாற்றி வருகின்றனர்.

ஹார்முஸ் ஜலசந்தி வழியாக இந்தியாவுக்கு கச்சா எண்ணெய், எரிவாயு, உரங்கள் கொண்டு வரும் சரக்கு கப்பல் போக்குவரத்து முடங்கியிருக்கிறது.

இப்போதைய இக்கட்டான காலத்திலும் பெட்ரோல், டீசல், காஸ் விநியோகம் சீராக நடைபெற்று வருகிறது. இந்தியாவின் சமையல் காஸ் தேவையில் 60 சதவீதம் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. உள்நாட்டில் சமையல் காஸ் உற்பத்தி அதிகரிக்கப்பட்டு உள்ளது. நாடு முழுவதும் பெட்ரோல், டீசல், சமையல் காஸ், உரம் தட்டுப்பாடு இன்றி கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது.

கச்சா எண்ணெய், எல்என்ஜி, எல்பிஜி ஆகியவை முன்பு 27 நாடுகளில் இருந்து கொள்முதல் செய்யப்பட்டது. தற்போது 41 நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. நமது நாட்டில் 53 லட்சம் மெட்ரிக் டன் கச்சா எண்ணெய் இருப்பு உள்ளது. இதனை 65 மெட்ரிக் டன்னாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது" என்று பேசியிருந்தார்.

இந்தப் பின்னணியில், அனைத்துக் கட்சி கூட்டத்துக்கு மத்திய அரசு அழைப்பு விடுத்திருப்பது கவனிக்கத்தக்கது.

முன்னதாக, பிப்ரவரி 28 அன்று, அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து நடத்திய ராணுவத் தாக்குதலில், ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி காமேனி கொல்லப்பட்டார்.

இதற்குப் பதிலடியாக, ஈரான் வளைகுடா நாடுகளின் பல பகுதிகளில் உள்ள இஸ்ரேல் மற்றும் அமெரிக்க தளங்களை தாக்கி வருகிறது. இதனால் கடல் மற்றும் விமானப் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதால், எரிபொருள் போக்குவரத்து சிக்கலை சந்தித்துள்ளது கவனிக்கத்தக்கது.

## திமுக கூட்டணியில் வி.சி.க.வுக்கு 8 தொகுதிகள் ஒதுக்கீடு இதில் முழு மனநிறைவு: திருமாவளவன் பேட்டி!

சென்னை : மார்ச்.25–



திமுக கழக பொருளாளரும் மக்களவை குழுத் தலைவர் டி.ஆர். பாலு தலைமையில் கூட்டணி கட்சிகளுடன் தொகுதி உடன்பாடு தொடர்பான ஆலோசனைக் கூட்டம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. பேச்சுவார்த்தையின் மூலம் சில கூட்டணி கட்சிகளுக்கான தொகுதி ஒதுக்கீடு இறுதி செய்யப்பட்டுள்ளதாக தி.மு.க. தலைமைக் கழகம் அறிவித்துள்ளது. அதன்படி, மனிதநேய மக்கள் கட்சி, இந்திய யூனியன் முஸ்லீம் லீக் மற்றும் கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சி ஆகிய 3 கட்சிகளுக்கும் தலா 2 தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. காங்கிரஸ் கட்சிக்கு 28 தொகுதிகளும், மாநிலங்களவைத் தேர்தலில் ஒரு இடமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், தே.மு.தி.க கட்சிக்கும் மாநிலங்களவைத் தேர்தலில் ஒரு இடம் ஒதுக்கப்பட்டுள்ளது

ம.தி.மு.க.விற்கு 4 தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 3 தொகுதிகளில் உதயசூரியன் சின்னத்திலும், ஒரு தொகுதியில் ம.தி.மு.க. சின்னத்திலும் போட்டியிட முடிவு செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு 5 தொகுதிகள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு 5 தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, இன்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலினை விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் உள்ளிட்ட நிர்வாகிகள் சந்தித்து தொகுதி ஒப்பந்தத்தை நிறைவு செய்தனர். அதன்படி, தி.மு.க. கூட்டணியில் உள்ள விசிகவுக்கு 8 தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது; இதில் 6 தனித் தொகுதிகளும், 2 பொதுத்தொகுதிகளிலும் விசிக போட்டியிடும் வகையில் முடிவு செய்யப்பட்டுள்ளது. தொகுதி உடன்பாட்டிற்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் மற்றும் விசிக தலைவர் தொல். திருமாவளவன் கையெழுத்திட்டனர்.

சென்னை அண்ணா அறிவாலயத்தில் விசிக தலைவர் தொல். திருமாவளவன் அளித்த பேட்டியில் கூறியதாவது:

"200க்கும் மேற்பட்ட தொகுதிகளில் தி.மு.க. கூட்டணி வெற்றி பெற வேண்டும் என வெட்கையோடு உழைத்து வருகிறோம். தமிழ்நாட்டு மக்களின் ஆதரவுடன் இக்கூட்டணி மாபெரும் வெற்றி பெறும்.

"இத்தேர்தலில் தற்காலிகமாக எங்களுக்கு என்ன லாபம் என நினைத்து வலதுசாரி அரசியலுக்கு நாங்கள் இடம்கொடுத்துவிட்டால், தமிழ்நாட்டில் சாதிவெறியர்களும் மதவெறியர்களும் மட்டுமே கொட்டம் அடிப்பார்கள். இடதுசாரி சக்திகள் பின்னுக்கு தள்ளப்படுவதை நாம் எதிர்கொள்வோம். விசிகவுக்கு கொடுத்த 8 தொகுதிகளும், இடதுசாரி கட்சிகளுக்கு கொடுத்த 10 தொகுதிகளும் சேர்த்து 18 தொகுதிகள், இடதுசாரி அரசியலை பாதுகாக்கும் இயக்கங்களுக்கு தி.மு.க. வழங்கியிருப்பதாக நான் பார்க்கிறேன்.

ஒருபுறம் வலதுசாரிகள், மற்றுபுறம் திராவிட அரசியலுக்கு எதிரான சமூகநீதி மீறி செயல்படும் திருபுவாத சக்திகளையும் வீழ்த்த வேண்டிய பொறுப்பு எங்களுக்கு உள்ளது. எனவே, ஓரிறு இடங்களுக்காக கூட்டணிக்கான வெற்றி வாய்ப்பை சேதப்படுத்த கூடாது என்ற உணர்வுடன் 8 தொகுதிகளுக்கான ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. இதில் எங்களுக்கு முழு மனநிறைவு உள்ளது!" எனத்தெரிவித்துள்ளார்.

## உத்தர பிரதேசத்தில் 2 தமிழர்கள் டிஜிபியாக பதவி உயர்வு

புதுடெல்லி: மார்ச்.25–




உத்தர பிரதேசத்தில் ஐபிஎஸ் அதிகாரிகளான டி.பிரகாஷ், எல்.வி.ஆண்டனி தேவ் குமார் ஆகிய இரு தமிழர்களுக்கு டிஜிபியாக பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளது. இவர்களில் ஒருவர் மாநில காவல் துறைக்கு தலைமையேற்கும் வாய்ப்பு உள்ளது.

திருநெல்வேலி பாளையங்கோட்டையைச் சேர்ந்தவர் டி.பிரகாஷ். சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் பொது நிர்வாகத்தில் எம்.ஏ., எம்.பில். பட்டமும் பெற்றார். பேராசிரியர் பணிக்கு முயன்ற இவர், மத்திய அரசின் யுபிஎஸ்சி தேர்வை எழுதினார். அதில் 1994ல் அவரது முதல் முயற்சியிலேயே ஐபிஎஸ் கிடைத்தது. உ.பி.மாநில பிரிவில் பணி ஒதுக்கப்பட்டது.

தற்போது, முதல்வர் யோகி ஆதித்யநாத் தலைமையிலான பாஜக ஆட்சியில் உ.பி. ரயில்வே ஏடிஜிபியாக அவர் சிறப்புடன் பணியாற்றி வந்தார். இந்நிலையில், அவருக்கு டிஜிபி பதவி உயர்வு அளிக்கப்பட்டு உள்ளது. இதுபோல் உ.பி.யில் ஐபிஎஸ் அதிகாரியாகப் பணியாற்றும் மற்றொரு தமிழர் எல்.வி ஆண்டனி தேவ் குமார். திருநெல்வேலி, திசையன்விளையை சேர்ந்த இவர், முதுகலையுடன் சட்டமும் பயின்றவர்.

யுபிஎஸ்சி தேர்வில் தீவிரம் காட்டி வந்த இவருக்கு 1994ல் ஐபிஎஸ் கிடைத்தது. உ.பி. மாநிலப் பிரிவில் பணியாற்றும் வாய்ப்பு கிடைத்தது. இவர் பணியில் நேர்மை காரணமாக எவரும் இல்லாத வகையில் அதிக முறை பணியிட மாற்றம் செய்யப்பட்டு வந்தார். உளவுத் துறையின் ஆக்ரா மாவட்ட கண்காணிப்பாளர் உள்ளிட்ட பல முக்கியப் பொறுப்புகளை ஆண்டனி வகித்துள்ளார்.

ராமர் கோயில் பாதுகாப்புக்காக புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள சிறப்பு பாதுகாப்பு படை தலைமை அதிகாரியாகவும் இருந்து அதை அமைத்தார். ஏடிஜிபியான ஆண்டனி தற்போது, மாநில காவல் துறை தலைமையகத்தின் ரூல்ஸ் அண்ட் மேனுவல்ஸ் பிரிவின் தலைமை அதிகாரியாக உள்ளார். இவருக்கும் டிஜிபி பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளது. உ.பி.யில் தற்போது பொறுப்பு டிஜிபியாக ராஜீவ் கிருஷ்ணா உள்ளார்.

எனினும், டிஜிபி நிரந்தரப் பணிக்கு என உரிய தகுதியும், அதிகத்திறமையும் வாய்ந்தவரை அமர்த்த முதல்வர் யோகி முயற்சிக்கிறார். இதற்கானத் தேர்வுப் பட்டியலில் பிரகாஷ் மற்றும் ஆண்டனி பெயர்களும் உள்ளன. உ.பி. அரசு சார்பில் இறுதியாக 3 அதிகாரிகள் கொண்ட பட்டியல் மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளது. இதிலும் இடம்பெற்று, ஒரு தமிழரே உ.பி.யின் டிஜிபியாகும் வாய்ப்பும் உருவாகி உள்ளது.

ஐஏஎஸ், ஐபிஎஸ், ஐஆர்எஸ், ஐஎப்எஸ் உள்ளிட்ட பல்வேறு பணிகளில் தமிழகத்தைச் சேர்ந்த சுமார் 32 அதிகாரிகள் உ.பி.யில் பணியாற்றுகின்றனர். இவர்களில் பலருக்கும் முதல்வர் யோகி முக்கியத்துவம் அளித்து வருகிறார். டிஜிபி அந்தஸ்துக்கு உயர்ந்த பிரகாஷ், ஆண்டனிக்கான உத்தரவையும் மத்திய உள்துறை அமைச்சகம் சார்பில் அதில் இயக்குநராகப் பணியாற்றும் தமிழரான ஏ.தினேஷ்குமார் வெளியிட்டுள்ளார்.

## மாம்பழம் சின்னம் விவகாரம்: ராமதாஸ் தரப்பு உரிமையியல் நீதிமன்றத்தில் முறையீடு

சென்னை: மார்ச்.25–



பாமகவின் மாம்பழம் சின்னம் குறித்த வழக்கு தொடர்பாக உச்ச நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு குறித்து நிறுவனர் ராமதாஸ் தரப்பு சென்னை உரிமை யியல் நீதிமன்றத்தில் முறையீடு.

மாம்பழம் சின்னம், பாமக பெயர் மற்றும் கொடி ஆகியவற்றை அன்புமணி பயன்படுத்த எதிர்ப்பு தெரிவித்து ராமதாஸ் தரப்பில் சென்னை உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது.

இந்நிலையில், பாமகவின் மாம்பழம் சின்னம் குறித்த வழக்கு தொடர்பாக உச்ச நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு குறித்து நிறுவனர் ராமதாஸ் தரப்பு சென்னை உரிமை யியல் நீதிமன்றத்தில் முறையீடு செய்துள்ளது.

இதனை, மனுவாக தாக்கல் செய்தால் இன்று (மார்ச் 25) விசாரிப்பதாகவும் அதற்கு முன்னதாக மனுவின் நகலை அன்புமணி ராமதாஸ் தரப்புக்கு வழங்கவும் நீதிபதி உத்தரவு.

வழக்கின் பின்னணி:

பாமகவில் நிறுவனர் ராமதாஸ் மற்றும் தலைவரான அவரது மகன் அன்புமணி ராமதாஸ் இடையே கட்சியின் உரிமை தொடர்பாக மோதல் நீடித்து வருகிறது. பாமகவின் மாம்பழம் சின்னத்தை அன்புமணிக்கு தேர்தல் ஆணையம் ஒதுக்கியது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்த ராமதாஸ், உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார்.

இந்த வழக்கு தலைமை நீதிபதி சூர்யகாந்த் அமர்வு முன்பு நேற்று விசாரணைக்கு வந்தபோது ராமதாஸ் தரப்பில், "கட்சிக்குள் பிரச்சினை ஏற்பட்டால் சின்னத்தை முடக்கி வைப்பது தான் நடைமுறை, குலுக்கல் முறையில் சின்னத்தை கொடுக்கும் நடைமுறையும் பின்பற்றவில்லை" எனத் தெரிவிக்கப்பட்டது.

அன்புமணி தரப்பில், "தேர்தல் ஆணையத்திடம் இருக்கும் ஆவணங்கள் அடிப்படையிலேயே தங்களது தரப்புக்கு மாம்பழம் சின்னம் ஒதுக்கீடு செய்யப்பட்டது," என விளக்கமளிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து தலைமை நீதிபதி சூர்யகாந்த் அமர்வு, இந்த விவகாரத்தில் தேர்தல் ஆணையம் 'ஃப்ரெண்ட்லி மேட்ச்' ஆடுகிறது எனத் தெரிவித்ததுடன், மாம்பழம் சின்னத்தை கேட்டு உரிமையியல் நீதிமன்றத்தை உடனடியாக நாட வேண்டும் என ராமதாஸ் தரப்புக்கு உத்தரவிட்டது. அவ்வாறு தாக்கல் செய்யப்படும் மனுவை மூன்றே நாட்களில் விசாரித்து முடிவை எடுக்க வேண்டும் எனவும் சென்னை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்துக்கு உத்தரவிட்டது.

மாம்பழம் சின்னம் விவகாரம் தொடர்பான உச்ச நீதிமன்ற உத்தரவு குறித்து டாக்டர் ராமதாஸ் தரப்பில் சென்னை உரிமையியல் நீதிமன்ற நீதிபதி எம்.தர்மபிரபு முன்பு நேற்று முறையீடு செய்யபட்டது.

அப்போது உங்கள் தரப்பில் மனுவாக தாக்கல் செய்தால் இன்று (மார்ச் 25) விசாரிப்பதாக தெரிவித்தார்.

## பேரவைத் தேர்தல் சிறப்பு பார்வையாளர் நியமனம்: பொதுமக்கள், அரசியல் கட்சிகள் தொடர்பு கொள்ளலாம்

சென்னை: மார்ச். 25–

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் சிறப்பு பார்வையாளராக பிரதாப் சிங் நியமிக்கப்பட்டார். தேர்தல்களில் அதிக செலவு செய்யும் மாநிலமாக தமிழகத்தை தேர்தல் ஆணையம் அடையாளம் கண்டுள்ளது.

கடந்த 2016 சட்டப்பேரவைத் தேர்தலின்போது, அரவக்குறிச்சி, திருப்பரங்குன்றம் ஆகிய தொகுதிகளில் அதிக செலவு செய்யப்படுவதை உறுதி செய்து, தேர்தலையே தேர்தல் ஆணையம் நிறுத்தியது

அப்போது அரசியல்வாதிகளிடம் அதிகளவிலான ரொக்கம் பறிமுதல் செய்யப்பட்டது. அதைத் தொடர்ந்து, கடந்த 2017ல் நடைபெற்ற சென்னை ஆர்.கே. நகர் இடைத்தேர்தலிலும், பணப் பட்டுவாடா நடைபெறுவதை உறுதி செய்து, அந்ததேர்தலையும் தேர்தல் ஆணையம் நிறுத்தியது.

இதற்கிடையே தமிழகத்தில் மொத்தம் உள்ள 234 தொகுதிகளில் 108 தொகுதிகள் அதிக செலவு செய்யக்கூடிய தொகுதிகளாக தேர்தல் ஆணையம் அடையாளம் கண்டுள்ளது.

வழக்கமாக இரு தொகுதிகளுக்கு ஒரு செலவினப் பார்வையாளரை நியமிக்கும் தேர்தல் ஆணையம், இந்த முறை 151 செலவினப் பார்வையாளர்களை நியமித்துள்ளது. தமிழகத்தில் தேர்தல் நேர்மையாக நடத்தப்பட வேண்டும் என்பதில் தேர்தல் ஆணையம் உறுதியாக உள்ளது.

அதை கருத்தில் கொண்டே மாநில அளவில் தேர்தல் சிறப்பு பார்வையாளராக பிரதாப் சிங் நியமிக்கப்பட்டுள்ளார். இவரை பொது மக்கள் மற்றும் அரசியல் கட்சிகள் தேர்தல் தொடர்பான விவகாரங்கள் குறித்து தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, சென்னை ஆயகர் பவனில், இணைப்புக் கட்டிடம், அறை எண். 412ல் அவரை சந்திக்கலாம். அவரது அலுவல தொலைபேசி எண். 044 28338378, கைபேசி எண் 7845321461, மின்னஞ்சல் முகவரி splobs.pelecd@tn.gov.in ஆகியவை மூலம் தொடர்பு கொள்ளலாம்.

அதே போல், அவரது தொடர்பு அலுவலர் ஜெகன் மோகனை 9551322999 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என அர்ச்சனா பட்நாயக் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

# 2026தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் நடைபெறவுள்ளதை முன்னிட்டு வாக்காளர்களுக்கு வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் திருச்சிராப்பள்ளி தென்னூர் உழவர் சந்தை மற்றும் சத்திரம் பேருந்து நிலையத்தில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்வுகள் நடைபெற்றது.

திருச்சி. மார்ச்.25–

2026தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் நடைபெற உள்ளதை முன்னிடடு வாக்காளர்களுக்கு வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு (SVEEP) ஏற்படுத்தும் வகையில் இன்று (24.03.2026) திருச்சிராப்பள்ளி தென்னூர் உழவர் சந்தை அருகில் ரங்கோலி கோலம் வரைதல், சிலம்பாட்டம், வாக்காளர் விழிப்புணர்வு பேரணி உள்ளிட்ட விழிப்புணர்வு நிகழ்வுகளை மாவட்ட தேர்தல் அலுவலர் ஃ மாவட்ட ஆட்சித்தலைவர் வே.சரவணன்.இ.ஆ.ப., அவர்கள், மாநகர காவல் ஆணையர் காமினி,இ.கா.ப., அவர்கள் ஆகியோர் தொடங்கி வைத்து பார்வையிட்டனர்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவிப்பின்படி 2026 தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் அறிவிப்பு வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள 9 சட்டமன்ற தொகுதிகளிலும் 100 சதவீதம் வாக்குப்பதிவை வலியுறுத்தும் வகையில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அதன் ஒரு பகுதியாக இன்று (24.03.2026) திருச்சிராப்பள்ளி தென்னூர்உழவர்சந்தை அருகில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஒருங ;கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தில் பணியாற்றும் அங்கன்வாடி மைய பணியாளர்கள் பங்கேற்று 100 சதவீதம் வாக்குப்பதிவை வலியுறுத்தும் வகையிலான வாசகங்களுடன் ரங்கோலி கோலம் வரைந்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

மேலும், மாவட்ட விளையாட்டு அலுவலகத்தின் சார்பில் வாக்களர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் சிலம்பாட்டம் மற்றும் வாக்காளர் விழிப்புணர்வு பேரணியில் விளையாட்டு வீரர்கள், மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் மற்றும் அங்கன்வாடி பணியாளர்கள் என 200 க்கும் மேற்பட்டோர் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணியை மாவட்ட தேர்தல் அலுவலர் ஃ மாவட்ட ஆட்சித்தலைவர் வே.சரவணன். இ.ஆ.ப., அவர்கள், மாநகர காவல் ஆணையர் திருமதி காமினி,இ.கா.ப., அவர்கள் ஆகியோர் தொடங்கி வைத்தனர். இப்பேரணியில், வாக்காளர் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை கையில் ஏந்தி விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இந்த விழிப்புணர்வு பேரணியானது தென்னூர் உழவர் சந்தையில் தொடங்கி பட்டாபிராமன் சாலை, அண்ணாநகர் பகுதிகளில் விழிப்புணர்வு மேற்கொண்டு மீண்டும் தென்னூர்உழவர் சந்தையில் நிறைவடைந்தது.

அதனைத் தொடர்ந்து திருச்சிராப்பள்ளி சத்திரம் பேருந்து நிலையத்தில் வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் வாக்காளர் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய ஒட்டுவில்லையை பேருந்துகளில் ஒட்டி மற்றும் பயணிகளுக்கு துண்டு பிரசுரங்கள் வழங்கியும், வாக்களிப்பது அனைவரின் ஜனநாயக கடமை வாருங்கள் 100 சதவ றிதம் வாக்களிப்போம் என்ற வாசகங்கள் அடங்கிய விழிப்புணர்வு ராட்சத பலூனை பறக்க விட்டும் மாவட்ட தேர்தல் அலுவலர் ஃ மாவட்ட ஆட்சித்தலைவர் வே.சரவணன்.இ.ஆ.ப., அவர்கள், மாநகர காவல் ஆணையர் காமினி,இ.கா.ப., அவர்கள் அவர்கள், மாநகர காவல் ஆணையர் திருமதி. காமினி,இ.கா.ப., அவர்கள் ஆகியோர் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இந்த விழிப்புணர்வு நிகழ்வுகளில், திட்ட இயக்குனர் (மகளிர் திட்டம்) சுரேஷ், மாவட்ட வருவாய ; அலுவலர் ஃ ஒழுங்கு நடவடிக்கை ஆணையர் திருச்சிராப்பள்ளி ஆர்.ராஜேந்திரன் அவர்கள், மாநகராட்சி அலுவலர்கள், மாநகராட்சி துணை ஆணையர் பாலு, உதவி ஆணையர் சென்னு கிருஷ்ணன், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம் (கும்ப) லிட்,.பொது மேலாளர் சதிஷ்குமார், துணை மேலாளர் வணிகம் புகழேந்திராஜ், உதவி மேலாளர் சரவணன், போக்குவரத்துக் கழக அலுவலர்கள், மாநகராட்சி அலுவலர்கள், மகளிர் சுய உதவிக்குழுவினர், அங்கன்வாடி மைய பணியாளர்கள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை சட்டமன்ற தொகுக்காக பயன்படுத்தப்படும் வாக்குப்பதிவு இயந்திரங்களை மணப்பாறை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் வக்கப்படவுள்ள பாதுகாப்பு அறையினை மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் சரவணன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

# தஞ்சை கலெக்டர் அலுவலகத்தில் மின்னனு வாக்குப்பதிவு இயந்திரங்கள் குலுக்கல் முறையிலான முதல் தேர்வு

## *மாவட்ட தேர்தல் அலுவலர் தலைமையில் நடைபெற்றது

தஞ்சாவூர் : மார்ச்.25–

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தலுக்காக தஞ்சாவூர் மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் குலுக்கல் முறையிலான முதல் தேர்வு மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்றது.



இந்திய தேர்தல் ஆணையத்தால் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தலுக்காக தஞ்சாவூர் மாவட்டத்திற்கென ஒதுக்கப்பட்டுள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களுக்கு மின்னணு வாக்குப்பதிவு இயந்திர மேலாண் (EMS 20)மென்பொருள் வாயிலாக குலுக்கல் முறையில் அனைத்து சட்டமன்ற தொகுதி வாரியாக பிரிப்பதற்கான முதல் தேர்வு (First Randomization) நடந்தது. இந்தியா சுற்றுலா

தஞ்சாவூர் மாவட்டத்திற்கென நியமிக்கப்பட்ட தேர்தல் பொதுபார்வையாளர்கள் மேற்பார்வையில் அனைத்து அங்கீகரிக் கப்பட்ட தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சி பிரதிநிதிகளின் முன்னிலையில் நேற்று மாவட்ட ஆட்சியரகத் திலுள்ள தேர்தல் கணிணி அறையில் நடைபெற்ற தேர்வுக்கு மாவட்ட தேர்தல் அலுவலரும், கலெக்டருமான பிரியங்கா பங்கஜம் தலைமை வகித்தார்.

இந்நிகழ்வின் போது மாவட்ட வருவாய் அலுவலர் தியாகராஜன், உதவி ஆட்சியர் (பயிற்சி) கார்த்திக் ராஜா மற்றும் தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த அனைத்து தேர்தல் நடத்தும் அலுவலர்களும் பங்கேற்றனர்.

# ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் கோவில் பிரம்மோற்சவ விழா கொடியேற்றம்..!





வந்தவாசி, மார்ச் 25:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஸ்ரீ ரங்கநாயகி தாயார் சமேத ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் கோவிலில் பங்குனி மாத பிரம்மோற்சவ விழா நேற்று கருடக் கொடியேற்றத்துடன் விமரிசையாக தொடங்கியது. முன்னதாக இந்த வைபவத்தில் மூல மூர்த்திகள் மற்றும் உற்சவ மூர்த்திகளுக்கு விசேஷ திருமஞ்சனம் நடந்தேறியது. பிறகு புஷ்ப அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தனர். இதில் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர். பங்கேற்ற அனைவருக்கும் தீர்த்த பிரசாதங்கள் வழங்கப்பட்டது. உற்சவ மூர்த்திகள் மேளதாளத்துடன் வீதியுலா வந்தனர்.

# திருவள்ளூர் நிரந்தர மக்கள் நீதிமன்றத்திற்கு உறுப்பினர் தேர்வுக்கு விண்ணப்பங்கள் வரவேற்பு

திருவள்ளூர் மார்ச் 25 :

திருவள்ளூர் நிரந்தர மக்கள் நீதிமன்றத்திற்கு ஒரு (1) உறுப்பினர் தேர்ந்தெடுப்பது தொடர்பாக, போக்குவரத்து சேவைகள், பயணிகள் போக்குவரத்து, சரக்கு போக்குவரத்து சேவைகள், அஞ்சல் துறை மற்றும் தொலைபேசி தொடர்பான சேவைகள், மின்சாரம், ஒளி மற்றும் தண்ணீர் வழங்கல் சேவைகள் (அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள்), பொது பாதுகாப்பு மற்றும் பொது சுகாதாரம், மருத்துவமனை மற்றும் மருந்தகம், காப்பீடு, கல்வி மற்றும் கல்வி நிறுவனங்கள் மற்றும் வீட்டுவசதி மற்றும் ரியல் எஸ்டேட் சம்பந்தமான சேவைகள் ஓய்வு பெற்ற அதிகாரிகள், 62 வயதுக்கு குறைவானவர்கள் போதிய அனுபவம் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

வருகிற 10 ஆம் தேதி கடைசி விண்ணப்பிக்க நாள் ஆகும். மேலும் விண்ணப்பத்துடன் தகுதி சான்றுகளையும் இணைக்க வேண்டும்.எனவே தகுதியான நபர்கள் தங்களது விண்ணப்பங்களை மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு தலைவர், முதன்மை மாவட்ட நீதிபதி, மாற்றுமுறை தீர்வு மையம் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம், திருவள்ளூர் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். திருவள்ளூர் என மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு செயலாளரும், மூத்த உரிமையியல் நீதிபதி நளினிதேவி தெரிவித்துள்ளார்.

# தேர்தல் நடத்தை விதி: தமிழ்நாட்டில் மது விற்பனைக்கு கட்டுப்பாடு!

சென்னை: மார்ச்.25–

தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருக்கும் வரை தமிழ்நாட்டில் மது விற்பனைக்கு தேர்தல் ஆணையம் கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. டாஸ்மாக்கில் ஒருவருக்கு 4.5 லிட்டர் மதுவும், 7.8 லிட்டர் பீர், 9 லிட்டர் ஒயின் மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளது

# சாலை நடுவில் தண்ணீர்



வேலூர் மாவட்டம புதிய பஸ் நிலையம் அருகில் காட்பாடி செல்லும் சாலை நடுவில் மூன்று நாட்களாகவே குடிநீர் தண்ணீர் கசிந்து வருகிறது காட்பாடிக்கு செல்லும் மெயின் சாலையே இதுதான் போக்குவரத்துக்கு மிகவும் நரிசலாக உள்ளது பொதுமக்கள் அபாயகரமாக கடந்து வருகிறார்கள் மாநகராட்சி நடவடிக்கை எடுக்குமா

# கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் முன்னிலையில் மின்னனு வாக்குப்பதிவு இயந்திரங்கள் முதற்கட்ட ஒதுக்கீடு



கிருஷ்ணகிரி, மார்ச்.25–

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 ஐ முன்னிட்டு, கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்டத்தின் ஆறு சட்டமன்ற தொகுதிகளின் தேர்தல் பொதுப் பார்வையாளர்கள் அனில் குமார் சிங் இ.ஆ.ப.சௌரவ் பாபு இ.ஆ.ப..பண்வே ராகுல் துக்காராம் இ.ஆ.ப., காவல் துறை பார்வை யாளர். திருதிமான் சர்க்கார் இ.கா.ப., மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர். ச.தினேஷ் குமார் இ.ஆ.ப., ஆகியோர் தலைமையில், ஆறு சட்டமன்ற தொகுதி களுக்கு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங் கள் அனுப்புவதற்கான முதல் சமவாய்ப்புக் குட்படுத்துதல் (EVM First Randomi zation) அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் நடைபெற்றது.

உடன், மாவட்ட காவல் கண்காணிப் பாளர்.பெ.தங்கதுரை, மாவட்ட வருவாய் அலுவலர். அ.சாதனைக்குரல், தேர்தல் நடத்தும் அலுவலர்கள்.சிவக் குமார் (ஊத்தங்கரை). அபிநயா (பர்கூர்),நா. ஷாஜகான் (கிருஷ்ண கிரி),கீதா ராணி (வேப்பன ப்பள்ளி),ஆக்ரிதி சேத்தி இ.ஆ.ப., (ஓசூர்), திரு.பழனி (தளி) உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# திருவள்ளூர் அருகே உரிய ஆவணங்களின்றி காரில் கொண்டு செல்லப்பட்ட ரூ.50,லட்சம் மதிப்பிலான 45 சவரன் தங்க நகைகள் பறிமுதல் செய்து கருவூலத்தில் ஒப்படைப்பு :



திருவள்ளூர் மார்ச் 25 :

தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்ததையடுத்து இந்திய தேர்தல் ஆணையம் அறிவுறுத்தலின் பேரில் வாக்காளர்களுக்கு பணம் கொடுப்பதை தடுக்கும் வகையில் பணப்புழக்கத்தை கட்டுப்படுத்த தீவிர வாகன சோதனை நடைபெற்று வருகிறது. 50 ஆயிரத்திற்கு மேல் கொண்டு செல்பவர்கள் உரிய ஆவணங்களை வைத்திருக்க வேண்டும் என இந்திய தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் திருவள்ளூர் அடுத்த மப்பேடு பகுதியில் தேர்தல் பறக்கும் படை குழுவினர் வாகன சோதனையில் ஈடுபட்டு வந்தனர். அப்போது அந்த வழியாக வந்த காரை மடக்கி சோதனை செய்தனர் அப்போது உரிய ஆவணங்கள் இன்றி ரூ.50, லட்சம் மதிப்பிலான 45 சவரன் தங்க நகைகள் கொண்டு வந்தது தெரிய வந்தது.

இதனை அடுத்து 45 சவரன் தங்க நகைகளை பறக்கும் படையினர் பறிமுதல் செய்து. திருவள்ளூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு கொண்டு வந்து திருவள்ளூர் தொகுதி தேர்தல் அலுவலர் ரவிச்சந்திரனிடம் ஒப்படைத்தனர். பின்னர் நடத்திய விசாரணையில் உளுந்தை கிராமத்தை சேர்ந்த மதன்குமார், இவரது மனைவி பூஜா தம்பதியினருக்கு திருமணமாகி சில மாதங்களே ஆன நிலையில் வீட்டில் இருந்த 45 சவரன் தங்க நகைகளை மப்பேடு பகுதியில் உள்ள வங்கி லாக்கரில் வைப்பதற்காக கொண்டு சென்றது தெரியவந்தது. இதனை அடுத்து உரிய ஆவணங்களை செலுத்தி நகைகளை பெற்றுக் கொள்ளலாம் என தேர்தல் அலுவலர் ரவிச்சந்திரன் தெரிவித்துள்ளார். இதனை தொடர்ந்து தங்க நகைகளை சீல் வைத்து கருவூலத்தில் ஒப்படைத்தனர்.

# சேலத்தில் பதற்றமான வாக்குச்சாவடி மையங்களில் தேர்தல் பொது பார்வையாளர் ஆய்வு.

சேலம். மார்ச். 25–

சேலம் தெற்கு சட்டமன்ற தொகுதியில் 268 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட் டுள்ளன. இந்த தொகுதி யில் 2லட்சத்து 24ஆயிரத்து 97 வாக்காளர்கள் உள்ளனர்.

இதில் 1 லட்சத்து 09 ஆயிரத்து 918 ஆண் வாக்காளர்களும், 1 லட்சத்து 14 ஆயிரத்து 130 பெண் வாக்காளர்களும், 49 மூன்றாம் பாலின வாக்காளர்களும் உள்ளனர். 73 வாக்குச் சாவடி மையங்களில் 268 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. 12 பதற்றமான வாக்குச் சாவடி மையங்கள் கண்டறியப் பட்டுள்ளன. இந்த வாக்குச்சாவடி மையங்களில் கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில், சேலம் தெற்கு சட்டமன்ற தொகுதியின் தேர்தல் பொது பார்வையாளர் சுகவீர் சைனி நேற்று தெற்கு சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட அம்மாபேட்டை மண்டலத்தில் உள்ள பதற்றமான வாக்குச் சாவடிகளை நேரில் சென்று ஆய்வு செய்தார். அதில், குமரகிரிபேட்டை, எருமாபாளையத்தில் உள்ள மாநகராட்சி தொடக்கப்பள்ளி வாக்குச்சாவடிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த வாக்குச்சாவடி மையங்களில், வாக்காளர்களுக்கு அனைத்து அடிப்படை வசதியும் செய்யப்பட்டுள்ளதா, பாகம் எண் எழுதப்பட்டுள்ளதா, மாற்றுத் திறனாளிகள் வாக்கு அளிக்கும் வகையில் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதா என கேட்டறிந்தார். மேலும், கண்காணிப்பு கேமரா வசதி அமைக்கப் பட்டுள்ளதா எனவும் ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது, சேலம் தெற்கு தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் இளங்கோவன், உதவி தேர்தல் அலுவலர் தமிழ்வேந்தன் மற்றும் தேர்தல் பணியாளர்கள் உடனிருந்தனர்.

# சிலிண்டர் தட்டுப்பாடு: அல்வா தயாரிப்பு நிறுத்தம்

நெல்லை: மார்ச்.25–

நெல்லையில் சாந்தி ஸ்வீட்ஸ் நிறுவனத்தில் சிலிண்டர் தட்டுப்பாட்டால் அல்வா தயாரிப்பு பணி நிறுத்தப்பட்டுள்ளது. அமெரிக்கா ஈரான் போர் நடந்து வந்ததால் தமிழ்நாடு உள்பட நாடு முழுவதும் வணிக சிலிண்டர்கள் தட்டுப்பாடு நிலவுகிறது. நெல்லை மாவட்டத்தில் வணிக சிலிண்டர் தட்டுப்பாட்டால் அல்வா தயாரிப்பு பணி நிறுத்தப்பட்டுள்ளது



லட்சிய ஜனநாயக கட்சியின் தலைவர் ஜோஸ் சார்லஸ் மார்டின் காமராஜ் நகர் தொகுதியில் போட்டியிட உள்ள நிலையில், தட்டாஞ்சாவடியில் உள்ள ஆதிதிராவிடர் நலத்துறை அலுவலகத்தில் தனது குடும்பத்தினருடன் இணைந்து வேட்பு மனுவை தாக்கல் செய்தார்.

## திருவள்ளூர் அருகே யமஹா இருசக்கர வாகனத்தில் சென்ற வெல்டர் லாரி மோதி சம்பவ இடத்திலேயே பலி :

திருவள்ளூர் மார்ச் 25 : திருவள்ளூர் அடுத்த கிளாம்பாக்கம் பகுதியைச் சேர்ந்த வெல்டர்கள் பாலாஜி (27) சஞ்சய்(25) இருவரும் யமஹா எம் டி இருசக்கர வாகனத்தில் தனது ஊரிலிருந்து தண்டலம் நோக்கி வந்துள்ளனர், அப்போது தண்டலம் பகுதியில் உள்ள சாலை வளைவில் கடக்க முயன்ற போது இருசக்கர வாகனம் எதிரே வந்த லாரி மீது மோதியதில் பின்னால் அமர்ந்திருந்த பாலாஜி சம்பவ இடத்திலேயே பலியானர்.

இதில் படுகாயமடைந்த சஞ்சய் மீட்கப்பட்டு திருவள்ளூர் மாவட்ட அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவர் மேல் சிகிச்சைக்காக சென்னை ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார், இச்சம்பவம் தொடர்பாக போக்குவரத்து புலனாய்வு போலீசார் வழக்கு பதிவு செய்து கர்நாடகா பதிவு எண் கொண்ட லாரியை பறிமுதல் செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



புதுச்சேரி, உப்பளம் சட்டமன்ற தொகுதியில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் போட்டியிடும் மாநில கழக செயலாளர் அன்பழகன் அவர்கள் இன்று போக்குவரத்து துறை அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அதிகாரி திரு.வினையராஜ் அவர்களிடம் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார். இந்நிகழ்வின் போது அதிமுக மாநில துணைச் செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, என்.ஆர். காங்கிரஸ் பாஸ்கர். பிஜேபி மாரியப்பன்,எல் ஜே கே அலெக்ஸ் ஆகியோர் உடன் உள்ளனர்.

## புதுச்சேரி அரியாங்குப்பம் தொகுதியில் எகிறும் 'மவுஸ்': அதிரடியாகக் களமிறங்கிய '10 ரூபாய்' ரகு!

புதுச்சேரி, மார்ச்.25–

புதுச்சேரி அரசியலில் பாரம்பரியக் கட்சிகளுக்கு இடையே, ஒரு புதிய மாற்றத்தை முன்னிறுத்தி அரியாங்குப்பம் தொகுதியில் வலுவான அதிர்வை ஏற்படுத்தி வருகிறார் '10 ரூபாய் சட்ட இயக்கத்தின்' நிறுவனர் ரகு. இன்று அவர் வேட்புமனுத் தாக்கல் செய்த விதம், அந்தத் தொகுதியில் அவருக்கு இருக்கும் வளர்ந்து வரும் செல்வாக்கை உறுதிப்படுத்தும் விதமாக அமைந்தது.

மக்கள் மத்தியில் பெருகும் ஆதரவு: அரியாங்குப்பம் தொகுதியில் ரகுவின் வருகை, மற்ற அரசியல் பிரமுகர்களிடையே ஒரு கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக இளைஞர்கள் மற்றும் சாமானிய மக்கள் மத்தியில் இவருக்கு இருக்கும் 'மவுஸ்' நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதற்கு முக்கியக் காரணம், அவர் முன்வைக்கும் "எளிமையான மற்றும் நேர்மையான அரசியல்" அணுகுமுறையே ஆகும்.

ஆரவாரமில்லாத வேட்புமனுத் தாக்கல்: தட்டாஞ்சாவடியில் உள்ள தேர்தல் அலுவலகத்தில் தனது









வேட்புமனுவை எளிமையான முறையில் ரகு தாக்கல் செய்தார். மனுத் தாக்கல் முடிந்து வெளியே வந்த அவரை, அரியாங்குப்பம் தொகுதி மக்கள் மற்றும் ஆதரவாளர்கள் பெரும் உற்சாகத்துடன் வரவேற்றனர். கூடியிருந்த அனைவருக்கும் இனிப்புகளை வழங்கித் தனது மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்ட அவர், மக்களுடன் மக்களாக நின்று உரையாடியது அங்கிருந்தவர்களை வெகுவாகக் கவர்ந்தது. "அரியாங்குப்பம் தொகுதியில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த மக்கள் தயாராகிவிட்டனர். அந்த மாற்றத்தின் குரலாகவே நான் களம் இறங்கியுள்ளேன்." ரகு

ஏன் அரியாங்குப்பத்தில் இவருக்கு இவ்வளவு வரவேற்பு?

நேரடித் தொடர்பு: தொகுதியில் உள்ள ஒவ்வொரு அடித்தட்டு மக்களின் பிரச்சனைகளையும் நேரடியாகச் சந்தித்துக் கேட்டறிவது.

புதிய அரசியல் கலாச்சாரம்: பண பலத்தை விட, சட்டப்பூர்வமான உரிமைகளைப் பெற்றுத் தரும் '10 ரூபாய் சட்ட இயக்கத்தின்' கொள்கைகள்.

வாழ்வாதார உறுதி: வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் ஆக்கப்பூர்வமான திட்டங்கள்.

வெற்றிக் கனியைப் பறிப்பாரா?

அரியாங்குப்பம் தொகுதி மக்கள் மாற்றத்தை விரும்பும் சூழலில், ரகுவின் வேட்புமனுத் தாக்கல் அந்தத் தொகுதியின் தேர்தல் களத்தை விறுவிறுப்பாக்கியுள்ளது. வழக்கமான அரசியல் கணக்குகளைத் தகர்த்து, ஒரு புதிய வரலாற்றை ரகு படைப்பார் என்று அவரது ஆதரவாளர்கள் நம்பிக்கையுடன் தெரிவிக்கின்றனர்.

மாற்றத்தை எதிர்நோக்கும் அரியாங்குப்பம் மக்களின் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்வாரா '10 ரூபாய்' ரகு? பொறுத்திருந்து பார்ப்போம்!



புதுச்சேரி, உருளையன்பேட்டை சட்டமன்ற தொகுதியில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் போட்டியிடும் மாநில கழக துணைச் செயலாளர் காந்தி அவர்கள் இன்று போக்குவரத்து துறை அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அதிகாரி திரு.வினையராஜ் அவர்களிடம் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார். இந்நிகழ்வின் போது உருளையன்பேட்டை அதிமுக தொகுதி செயலாளர் வி.கோபால்,காமராஜர் நகர் அதிமுக தொகுதி செயலாளர் கே. ஆறுமுகம் ஆகியோர் உடன் உள்ளனர்.

## புதுச்சேரி பொருத்தவரை கட்சிக்கும் சின்னத்துக்கும் ஓட்டு கிடையாது...

# வேட்பாளரை பொருத்தே ஓட்டு விழும்



புதுச்சேரி, மார்ச்.25–

புதுச்சேரி தேங்காய்த் திட்டு வன்னிய முன்னேற்ற இயக்க தலைவர் லிங்கசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில்

மதிப்புக்கு மரியாதைக்குரிய பாராளுமன்ற உறுப்பினர் திரு வைத்திலிங்கம் அவர்களுக்கு அன்பான வேண்டுகோள் முன்னாள் முதலமைச்சர் நாராயணசாமி அவர்களுக்கு சீட்டு கிடையாது என்று ஒரு நாடகத்தை அரங்கேற்று உள்ளீர்கள் ஏனென்றால் அவரை முன்னிறுத்தினால் வெற்றி பெற முடியாது எனவே அவரை புறக்கணிப்பது போல் ஒரு நாடகம் அரங்கேறி உள்ளது மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் திரு ரங்கசாமி அவர்கள் போட்டியிடும் தொகுதியில் ஒன்றான தட்டாஞ்சாவடி தொகுதியில் வேற்றுமண் தாக்கல் செய்து உள்ளீர்கள் புதுவை மக்களை திசை திருப்பி உள்ளீர்கள் மதிப்பிற்குரிய திரு நாராயணசாமி அவர்களை மக்கள் ஏற்கவில்லை என்று இரண்டு முறை நீங்கள் பாராளுமன்ற தேர்தலில் வெற்றி பெற்றதால் நம்பளை மக்கள் ஏற்றுக் கொள்கிறார் என்று எண்ணத்தில் இறங்கி உள்ளீர்கள் இது முற்றிலும் தவறு பாராளுமன்றம் தேர்தல் வேற சட்டமன்றத் தேர்தல் வேற பாராளுமன்றம் தேர்தல் முழுக்க முழுக்க தேசிய தலைவர்களை பொறுத்து உள்ளது அதாவது மதிப்புக்குரிய திரு ராகுல் காந்தி அவர்களின் மீது மக்கள் நம்பிக்கை வைத்துள்ளார்கள் ஏனென்றால் திரு முன்னாள் பிரதமர் திரு ராஜீவ் காந்தி அவர்கள் புதுச்சேரி மக்கள் மீது அன்பு வைத்திருந்தார் தனி கவனம் செலுத்தி இருந்தால் அதனால் அவர் மகனான திரு ராகுல் காந்தி அவர்கள் புதுச்சேரி மக்கள் தொடர்ந்து இரண்டு முறை வாய்ப்பு தந்துள்ளார் இதை தவறாக புரிந்து கொண்டு நமக்குத் தான் மக்கள் நம்பிக்கை வைத்து உள்ளார்கள் என்று மனக்கணக்கு போட்டு உள்ளீர்கள் நீங்களும் சரி புதுச்சேரி முதலமைச்சர் திரு ரங்கசாமி அவர்களும் சரி புதுச்சேரி பொருத்தவரையிலும் மக்கள் கருணை உள்ள மக்கள் யாரிடம் அன்பு பாசம் மக்களுக்காக பாடுபடுகிறார்களோ வேலை செய்கிறார்களோ என்று புரிந்து கட்சிக்கு ஓட்டு கிடையாது இங்கு ஆளுக்கு மட்டும் தான் ஓட்டு இதை புரிந்து கொள்ளுங்கள் ஏனென்றால் நீங்கள் இருவரும் கற்பனையில் வாழ்கிறீர்கள் எங்கள் தலைமைக்குத்தான் ஓட்டு என்று பாராளுமன்றம் தேர்தல் வரும் முன்பே புதுவை முழுவதும் குடும்ப அட்டைக்கு 5000 ரூபாய் வழங்கினார் மாண்புமிகு முதலமைச்சர் ரங்கசாமி அவர்கள் ஏன் பாராளுமன்றத்தில் தோல்வி தழுவினார் புரிந்து கொள்ள வேண்டும் மக்கள் அனுதாபம் அன்பு காட்டும் மனிதர்கள் இருக்கும் இடத்தில் தான் மக்களுக்கு தொடர்ந்து நல்லது செய்து வரும் நபருக்கு தான் ஓட்டு தெளிவாக உள்ளார்கள் இப்பொழுது கூடம் உங்கள் கூட்டணி கட்சியில் காலாப்பட்டு தொகுதியில் திரு செந்தில் அவர்கள் மக்களை சந்திக்க உள்ளார் போன முறை தோல்வி தழுவி உள்ளார் ஆனால் அந்த மக்கள் போன முறை அந்தப் பிள்ளையை தோற்கடித்து விட்டோம் இந்த முறையாவது வாய்ப்பு கொடுப்போம் என்று வெற்றி பெற செய்வார்கள் அது உங்களால் இல்லை அனுதாபம் அவர்கள் செய்யும் அணுகுமுறை மற்றும் அரியாங்குப்பத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு ஜெயமூர்த்தி அவர்கள் துணைவியார் வாய்ப்பு கொடுத்து உள்ளீர்கள் அவர் இரண்டு வருடமாக பணியாற்றி கொண்டு வந்திருக்கிறார் அவர் முகத்தை பார்க்கவே வருதாவும் ஆக கஷ்டமாக உள்ளது அவருக்கு தொகுதி மக்கள் அனுதாபம் ஒரு பெண் வெளியே வருவது கடினம் இந்த அளவுக்கு மக்கள் இடையே கஷ்டப்பட்டு கொண்டிருக்கும் அந்த கஷ்டம் மக்கள் மனதை தொட்டுவிடும் இப்படி தான் புதுச்சேரி மக்கள் வேட்பாளர் மீது பாவப்பட்டு கஷ்டப்பட்டு அடிதாயி வாக்களிப்பார்கள் இதுதான் புதுச்சேரி மக்களின் நிலை அது மட்டுமல்லாமல் உழவர் கரை தொகுதி சரவணன் சொந்த ஊருக்கார் அவருக்கு சீட்டு இல்லை கதிர்காமம் தொகுதி வெகு நாளாக வேலை செய்து கொண்டிருக்கும் அழகு என்ற அழகானந்தம் இது போன்ற மனிதர்களை அந்தந்த தொகுதி மக்கள் அவர்களைப் பார்த்து சூழ்நிலையும் வருந்துவதை நினைத்து தான் மற்ற தொகுதிகளிலும் அனைத்து தொகுதிகளிலும் புதுச்சேரி மக்கள் வாக்களிக்கின்றார்கள் இதுதான் ஆணித்தனமான உண்மை அதுமட்டுமில்லாமல் காரைக்காலில் நெடுங்காடு தொகுதியில் திரு சந்திர பிரியங்கா மற்றும் திருபுவனை தொகுதியும் திரு கோபிகா அவர்கள் பெண்கள் கஷ்டப்பட்டு முன்னேற்றம் அடைய வேண்டும் இன்று பாடுபட்டு மக்களிடையே சேவை செய்து கொண்டிருக்கிறார்கள் இது போன்று தான் புதுச்சேரி மக்கள் கஷ்டப்படுபவர்கள் மக்களுக்காக உழைப்பவர்கள் அன்பு காட்டுபவர்கள் கஷ்டத்தில் உள்ளவர்கள் தோல்வி கண்டவர்களை மறுபடியும் ஒரு வாய்ப்பு கொடுப்போம் புதிதாக நிற்கும் மனிதர்களுக்கு வாய்ப்பு கொடுப்போம் என்று நினைத்து தான் வாய்ப்பு தருவார்கள் அதை விட்டுவிட்டு எங்களுக்கு தான் எங்கள் தலைமைக்கு தான் புதுச்சேரி மக்கள் வாய்ப்பு தருவார்கள் என்று நினைக்கக் கூடாது இந்த நிலையில் பாதிப்புக்குரிய பாராளுமன்ற உறுப்பினர் திரு வைத்தியலிங்கம் அவர்களே புரிந்து கொள்ள வேண்டும்.

## கும்பகோணம் அருகே மின்கம்பங்களில் மோதி அரசு பேருந்து விபத்து!

தஞ்சாவூர்: மார்ச். 25–

கும்பகோணம் அருகே திருபுவனத்தில் 2 மின்கம்பங்களில் மோதி அரசு பேருந்து விபத்திற்குள்ளானது. நல்வாய்ப்பாக உயிர் சேதங்கள் ஏற்படவில்லை. ஓட்டுநருக்கு மட்டும் லேசான காயம் ஏற்பட்டது. இந்த சம்பவம் குறித்து திருவிடைமருதூர் காவல் நிலையத்தார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## தமிழகத்தில் சட்டமன்றத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில் நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் திருத்தணியில் பிரச்சாரத்தை தொடங்குவதை முன்னிட்டு திருத்தணி முருகன் கோவிலில் சாமி தரிசனம்



திருவள்ளூர் மார்ச் 25 :

தமிழகத்தில் சட்டமன்றத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில் நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் திருத்தணியில் பிரச்சாரத்தை தொடங்குவதை முன்னிட்டு திருத்தணி முருகன் கோவிலில் சாமி தரிசனம் செய்ய தனது குடும்பத்துடன் வருகை தந்து சரவணப் பொய்கை மலை அடிவாரத்தில் இருந்து பூஜை செய்யப்பட்ட வேலுடன் 365 படிகள் வழியாக நடந்து வந்து முருகப்பெருமானை தரிசனம் செய்தார். பின்னர் செய்தியாளர்கள் சந்தித்த அவர், முருகனை நம்பி தான் நான் போர்க்களத்துக்கு வந்து உள்ளேன்.

எனவே அவரிடம் சொல்லிவிட்டு தான் போக வேண்டும் என இங்கு வந்துள்ளேன். நல்ல ஆட்சி பிறக்க வேண்டும். என் நாட்டை மாற்ற வேண்டும் என தான் தேர்லுக்கு வந்து உள்ளேன். இன்று முதல் ஏப்ரல் 21 ஆம் தேதி வரை தொடர்ச்சியாக தேர்தல் பரப்புரை மேற்கொள்ள உள்ளேன். எல்லா கட்சிகளுக்கும் ஒரே எதிர் கட்சி நாங்கள் தான் .இலவசங்கள் தராத ஒரே கட்சி நாங்கள் தான்.

அவர்கள் எல்லாம் சூலாயுதமாக இருக்கிறார்கள். நாங்கள் வேலோடு இருக்கிறோம். .இலவசம் என்பது ஒரு ஏமாற்றம் அது ஒரு லஞ்சம்.நீண்ட காலமாக இலவசங்களை கொடுத்து உள்ளனர். அதனை மாற்ற வேண்டும் என நடந்து வருகிறோம். மற்றவர்களை விட முன்கூட்டியே தேர்தல் பணிகளை தொடங்க காரணம் 500 ஆண்டுகாலமாக நாங்கள் மாற்ற வேண்டும் என நாங்கள் போராடி வருகிறோம் என கூறினார். இன்று முதல் நான் எது தேர்தல் பிரச்சாரத்தை திருத்தணியில் இருந்து தொடங்குகிறேன் என்று அவர் தெரிவித்தார்.

## மின்சாரம் பாய்ந்து 3 பசுக்கள் பலி பாதிக்கப்பட்டவர்களுக்கு ராஜா எம்எல்ஏ ஆறுதல்

சங்கரன்கோவில் : மார்ச்.25–

சங்கரன்கோவில் அருகே மின்சாரம் பாய்ந்து 3 பசுக்கள் பலியானதை தொடர்ந்து அப்பகுதிக்கு சென்ற ராஜா எம்எல்ஏ பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் கூறினார். சங்கரன்கோவில் அருகேயுள்ள இலவன்குளம் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் குருநாதன் மற்றும் கடல். இவர்களுக்கு சொந்தமான பசு மாடுகள் கடந்த 21ம்தேதி வழக்கம் போல் அப்பகுதியில் உள்ள வயலில் மேய்ந்து கொண்டிருந்தது.

அப்போது எதிர்பாராவிதமாக வயலில் தாழ்வாக சென்ற மின்வயர் 3 பசுக்கள் மீது பட்டதில் சம்பவ இடத் திலேயே பரிதாபமாக உயிரிழந்தது. தகவலறிந்த மின் ஊழியர்கள் உடனடியாக அப்பகுதியில் மின் இணைப்பைத் துண்டித்தனர்.

மின்சாரம் பாய்ந்து மாடுகள் உயிரிழந்த சம்பவத்தை தொடர்ந்து தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ, அப்பகுதிக்கு நேரில் சென்று பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் கூறினார். நிகழ்வில் சங்கரன்கோவில் யூனியன் துணை சேர்மன் செல்வி கோட்டூர்சாமி, கிளை செயலாளர்கள் இலவன்குளம் திருப்பதி, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் உதயகுமார், நகர மாணவரணி அமைப்பாளர் வெங்கடேஷ் ஆகியோர் உடனிருந்தனர்.

# திருவள்ளூரில் 100 சதவிகித வாக்குப்பதிவை வலியுறுத்தும் விதமாக உறுதிமொழி பத்திரங்கள்

## மாவட்ட தேர்தல் அலுவலர் மு.பிரதாப் வழங்கி விழிப்புணர்வு

திருவள்ளூர் மார்ச் 25 :

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் “தேர்தல் திருவிழா தமிழ்நாட்டின் பெருவிழா” சட்டமன்ற பொது தேர்தல்2026 யை முன்னிட்டு 100 சதவிகித வாக்குப்பதிவை வலியுறுத்தும் விதமாக மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சியருமான மு. பிரதாப் தலைமையில் பள்ளி மாணவ மாணவிகள், மாணவர்களின் பெற்றோர்கள் மற்றும் பள்ளிக் கல்வித் துறை அலுவலர்களுக்கு உறுதிமொழி பத்திரங்களை (சங்கல்ப் பத்திர) வழங்கி விழிப்புணர்வை ஏற்படுத்தி பேசினார்.



தமிழ்நாடு சட்டமன்றத்திற்கான பொதுத் தேர்தல் 23 ஏப்ரல் 2026 அன்று நடைபெற உள்ளது. திருவள்ளூர் மாவட்டத்தில் 100 சதவீதம் வாக்களித்தல் மற்றும் பணம் ரு பொருள் உள்ளிட்ட எந்தவித தூண்டுதலும் இன்றி வாக்களிக்க வேண்டும் என்ற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு வாக்காளர்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஷிக்ஷிணிணிறி செயல்பாடுகள் மூலம் பல்வேறு நிகழ்ச்சிகள், ஊரக வளர்ச்சித்துறை, நகர்ப்புற உள்ளாட்சிகள், வருவாய் துறையினர், கல்வி நிறுவனங்களின் மாணவ மாணவியர், மகளிர் சுய உதவிக் குழுவினர்கள் உள்ளிட்ட பல்துறை பங்கேற்பில் நடைபெற்று வருகின்றன.

தேர்தல் விழிப்புணர்வின் மிக முக்கிய அங்கமாக Sankalp Patra உறுதிமொழி பத்திரம் மூலம் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள 1,50,000 எண்ணிக்கையில் உள்ள பள்ளி மாணவ மாணவியர் மூலம் அவர்களது பெற்றோர்களிடமும் விழிப்புணர்வை ஏற்படுத்தி, திருவள்ளூர் மாவட்டத்தில் 100 சதவீதம் வாக்களித்தல் மற்றும் பணம், பொருள் உள்ளிட்ட எவ்வித தூண்டுதலும் இன்றி வாக்களிக்க வேண்டும் என்ற நோக்கத்தினை அடையும் புதுமையான முயற்சியாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரங்களை பள்ளிக் கல்வித்துறை அலுவலர்களுக்கு வழங்கி அதனை பள்ளி தலைமையாசிரியர்கள் ஒவ்வொரு மாணவ மாணவியர்களின் பெற்றோர்களிடம் நோக்கத்தினை எடுத்துரைத்து உறுதிமொழி பத்திரத்தில் கையொப்பம் பெற்று மீண்டும் மாவட்ட தேர்தல் அலுவலர் அவர்களிடம் உறுதிமொழி பத்திரத்தினை திரும்ப வழங்கப்படும் என மாவட்ட தேர்தல் அலுவலர் மு.பிரதாப் கூறினார்.

இதில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநரும் இணை இயக்குநருமான வை.ஜெயக்குமார், உதவி இயக்குநர் (ஊராட்சிகள் (ம) தணிக்கை) (திருவள்ளூர் கிழக்கு) சு.பஞ்சு, உதவி இயக்குநர் (பயிற்சி) மோகன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் (பொ)கோ.சுப்பராவ், பள்ளி தலைமையாசிரியர்கள், மாணவ, மாணவியர்கள் மற்றும் பள்ளிக்கல்வி துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி 100 சதவீதம் வாக்குப்பதிவை வலியுறுத்திடும் வகையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக முகப்பு பகுதியில தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் சார்பில் நறுமணப் பொருட்களின்விதைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட ஒரு கைவிரல் மையுடன் வாக்குப்பதிவு குறித்த விழிப்புணரவு சின்னத்தை பார்வையிட்டும், உடன் நின்று புகைப்படம் எடுத்தும் வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

# 4 தொகுதிகளுக்கு கணினி மூலம் சுழற்சி முறையில் 6,692 பேருக்கு வாக்குப்பதிவு பணி ஒதுக்கீடு

## ஆலோசனை கூட்டத்தில் கலெக்டர் ரஞ்ஜீத்சிங் தகவல்

தேனி : மார்ச்.25–

தேனி மாவட்டத்தில் சட்டமன்றத் தேர்தலை ஒட்டி வாக்குப்பதிவு பணியில் ஈடுபட உள்ள அலுவலர்களை கணினி மூலம் சுழற்சி முறையில் பணி ஒதுக்கீடு செய்வது குறித்த ஆலோசனைக் கூட்டம் கலெக்டர் தலைமையில் நடந்தது.



தேனி மாவட்ட கலெக்டர் அலுவலகக் கூட்டரங்கில் தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தலையொட்டி வாக்குப்பதிவு பணிகளில் ஈடுபட உள்ள வாக்குச்சாவடி தலைமை அலுவலர்கள் மற்றும் வாக்குச்சாவடி நிலை1 , நிலை 2, நிலை 3 அலுவலர்களுக்கு கணினி மூலம் சுழற்சி முறையில் பணிகள் ஒதுக்கீடு செய்வதற்கான முதற் கட்ட சீரற்றமயமாக்கல் ஆலோசனை கூட்டம் நேற்று நடந்தது. கூட்டத்திற்கு மாவட்ட தேர்தல் அலுவலரான கலெக்டர் ரஞ்ஜீத்சிங் தலைமை வகித்தார்.

இந்த கூட்டத்தில், தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் ஒரே கட்டமாக வருகிற ஏப்ரல் 23ஆம் தேதி நடைபெற உள்ளது. தேனி மாவட்டத்தில் ஆண்டிபட்டி, பெரியகுளம் (தனி), போடி மற்றும் கம்பம் ஆகிய 4 சட்டமன்றத் தொகுதிகள் உள்ளன.

அதனடிப்படையில், ஆண்டிபட்டி சட்டமன்றத் தொகுதியில் 344 வாக்குச்சாவடி மையங்களில் பணிபுரிவதற்காக 410 வாக்குச்சாவடி தலைமை அலுவலர்களும், நிலை1 வாக்குப்பதிவு அலுவலர்கள் நிலையில் 455 நபர்களும், நிலை2 வாக்குப்பதிவு அலுவலர்கள் நிலையில் 387 நபர்களும், நிலை3 வாக்குப்பதிவு அலுவலர்கள் நிலையில் 339 நபர்களும் என மொத்தம் 1591 நபர்களுக்கு பணி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பெரியகுளம் சட்டமன்றத் தொகுதியில் 359 வாக்குச்சாவடி மையங்களில் பணிபுரிவதற்காக 431 வாக்குச்சாவடி தலைமை அலுவலர்களும், நிலை1 வாக்குப்பதிவு அலுவலர்கள் நிலையில் 454 நபர்களும், நிலை2 வாக்குப்பதிவு அலுவலர்கள் நிலையில் 483 நபர்களும், நிலை3 வாக்குப்பதிவு அலுவலர்கள் நிலையில் 484 நபர்களும் என மொத்தம் 1852 நபர்களுக்கு பணி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

போடி சட்டமன்றத் தொகுதியில் 346 வாக்குச்சாவடி மையங்களில் பணிபுரிவதற்காக 401 வாக்குச்சாவடி தலைமை அலுவலர்களும், நிலை1 வாக்குப்பதிவு அலுவலர்கள் நிலையில் 385 நபர்களும், நிலை2 வாக்குப்பதிவு அலுவலர்கள் நிலையில் 412 நபர்களும், நிலை3 வாக்குப்பதிவு அலுவலர்கள் நிலையில் 398 நபர்களும் என மொத்தம் 1596 நபர்களுக்கு பணி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கம்பம் சட்டமன்றத் தொகுதியில் 345 வாக்குச்சாவடி மையங்களில் பணிபுரிவதற்காக 431 வாக்குச்சாவடி தலைமை அலுவலர்களும், நிலை1 வாக்குப்பதிவு அலுவலர்கள் நிலையில் 379 நபர்களும், நிலை2 வாக்குப்பதிவு அலுவலர்கள் நிலையில் 391 நபர்களும், நிலை3 வாக்குப்பதிவு அலுவலர்கள் நிலையில் 452 நபர்களும் என மொத்தம் 1653 நபர்களுக்கு பணி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தேனி மாவட்டத்தில் மொத்தம் உள்ள 1394 வாக்குச்சாவடி மையங்களுக்கு 1673 வாக்குச்சாவடி தலைமை அலுவலர்களும், நிலை1 வாக்குப்பதிவு அலுவலர்கள் நிலையில் 1673 நபர்களும், நிலை2 வாக்குப்பதிவு அலுவலர்கள் நிலையில் 1673 நபர்களும், நிலை3 வாக்குப்பதிவு அலுவலர்கள் நிலையில் என மொத்தம் 6,692 நபர்களுக்கு பணி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பணி ஒதுக்கீடு செய்யப்பட்ட அனைத்து அலுவலர்களுக்கும் முதல் கட்ட தேர்தல் பயிற்சி வகுப்பு வருகின்ற 28ம் தேதி ஆண்டிபட்டி சட்டமன்றத் தொகுதிக்கு ஆண்டிபட்டியில் உள்ள வேளாங்கன்னி மாதா மெட்ரிக்குலேசன் மேல்நிலைப் பள்ளியிலும், பெரியகுளம் சட்டமன்றத் தொகுதிக்கு, தேனி அருகே வடபுதுபட்டியில் உள்ள தேனி நாடார் சரஸ்வதி கல்லூரி வளாகத்திலும், போடி. சட்டமன்றத் தொகுதிக்கு தேனி முத்து தேவன் பட்டியில் உள்ள வேலம்மாள் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியிலும், கம்பம் சட்டமன்றத் தொகுதிக்கு, உத்தமபாளையம் ஹாஜி கருத்த ராவுத்தர் கவுதியா கல்லூரியிலும் நடைபெற உள்ளது.

இப்பயிற்சி வகுப்பில் பணி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள அலுவலர்கள் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என மாவட்ட தேர்தல் அலுவலரான கலெக்டர் ரஞ்ஜீத் சிங் தெரிவித்துள்ளார். இதில், மாவட்ட வருவாய் அலுவலர் ராஜகுமார், தேர்தல் நடத்தும் அலுவலர்களான பெரியகுளம் சார் ஆட்சியர் ரஜத் பீடன், சமூக பாதுகாப்புத் திட்ட தனித்துணை ஆட்சியர் கவிதா, மாவட்ட வழங்கல் அலுவலர் நல்லையா, உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் சையத் முகைதீன் இப்ராஹிம், தேர்தல் வட்டாட்சியர் சுருளி மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்களான வட்டாட்சியர்கள் உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# சேலத்தில் சிலிண்டருக்கு இறுதி ஊர்வலம் நடத்தி நூதன முறையில் மனு



சேலம். மார்ச்.25–

சேலத்தில் சிலிண்டர் தட்டுப்பாட்டை போக்க வலியுறுத்தி, இறுதி ஊர்வலம் நடத்தி நூதன முறையில் மனு அளிக்க வந்தவர்களால் பரபரப்பு ஏற்பட்டது.

தமிழகம் முழுவதும் சமையல் மற்றும் வர்த்தக சிலிண்டருக்கு கடும் தட்டுப்பாடு நிலவி வருகிறது.

இதனால் பல ஓட்டல்களில் உணவு வகைகள் குறைக்கப் பட்டுள்ளதுடன், விலையும் கணிசமாக அதிகரிக்கப் பட்டுள்ளது. இந்நிலையில், சேலத்தில் தட்டுப்பாட்டை போக்க வலியுறுத்தி, சிலிண்டருக்கு இறுதி ஊர்வலம் நடத்தி நூதன முறையில் மனு அளிக்க வந்தவர்களால் பரபரப்பு ஏற்பட்டது.

சேலம் தாதகாப்பட்டி சஞ்சீவிராயன் பேட்டையை சேர்ந்தவர் பார்த்திபன். சமூக ஆர்வலரான இவர், நேற்று சமையல் காஸ் சிலிண்டருக்கு மாலை அணிவித்ததுடன், அதில் ஒரு ரூபாய் நாணயத்தை இறந்தவர்களுக்கு ஒட்டுவது போன்று ஒட்டி, ஊர்வலமாக எடுத்து வந்தார். அப்போது உடன் வந்தவர்கள் ஒரு பானையை எடுத்துக்கொண்டு, சங்கு ஊதியவாறு ஊர்வலமாக கலெக்டர் அலுவலகத்திற்கு வந்தனர்.

நுழைவுவாயிலில் அவர்களை தடுத்து நிறுத்திய போலீசார் இதுகுறித்து விசாரணை நடத்தினர். அப்போது அவர்கள் கூறுகையில், ‘‘தமிழகத்தில் காஸ் தட்டுப்பாடு காரணமாக வீட்டு சிலிண்டர், வர்த்தக சிலிண்டர் விலை உயர்த்தி விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இதனால் அனைத்து வகை உணவகங்கள், தேநீர் கடை, சிறுகுறு உணவகங்களில் விலை உயர்ந்துள்ளது. தற்போதுள்ள சூழ்நிலையில் ஈரானிலிருந்து எரிவாயு கொள்முதல் செய்வதற்கு பதிலாக, ரஷ்யாவில் இருந்து கொள்முதல் செய்து கொண்டு வந்தால் தட்டுப்பாடு இருக்காது. எனவே மத்திய அரசு உடனடியாக இதுகுறித்து நடவடிக்கை எடுத்து சிலிண்டர் தட்டுப்பாட்டை போக்க வேண்டும்,”என்றனர்.

# திருவள்ளூர் அருகே கஞ்சா விற்பனையால் வீண் சண்டை போட்டு பெண்ணின் மண்டையை கத்தியால் தாக்கியதில் 8 தையல் போட்டு மருத்துவமனையில் சிகிச்சை

## தாலி சரடையும் அறுத்துச் சென்றதாக போலீசில் பெண் புகார்

திருவள்ளூர் மார்ச் 25 :

திருவள்ளூர் அடுத்த சிறுவானூர் கிராமத்தைச் சேர்ந்தவர் டென்னீஸ். இவரது மனைவி நாகதேவி. இவர்களது வீட்டின் அருகில் வசிக்கும் பழனி தேவி ஆகியோர் வசித்து வருகின்றனர். இந்நிலையில் பழனியின் உறவினர்களான புன்னப்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த சக்தி, மற்றும் மூர்த்தி ஆகியோர் கஞ்சா விற்பனையில் ஈடுபடுவதாக கூறப்படுகிறது. அதிகாலை நேரத்தில் ஆட்டோவில் கஞ்சாவை ஏற்றிக் கொண்டு ரயில் நிலையத்திற்கு செல்வது கிராமத்தில் பரவலாக தெரியவந்தது. இது குறித்து டென்னீஸ் மற்றும் நாகதேவி ஆகியோர் இது குறித்து கிராம மக்களிடம் பேசியதாக கூறப்படுகிறது.



இதனால் ஆத்திரமடைந்த பழனி குடும்பத்தார் இவர்கள் மீது கடும் கோபத்தில் இருந்துள்ளனர். இந்நிலையில் நேற்று நாகதேவி வீட்டு கோழி பக்கத்து வீட்டில் வசிக்கும் பழனி வீட்டிற்கு சென்று மேய்ந்ததாக கூறி வீண் சண்டை போட்டு தகாத வார்த்தைகளால் பேசி நாகதேவியின் புடவையையும் உருவி மானபங்கப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டதோடு அங்கிருந்த கத்தியால் தலையில் பலமாக வெட்டியுள்ளனர். மேலும் கணவன் டென்னீசையும் தாக்கியுள்ளனர். நாகதேவி அணிந்திருந்த தங்க தாலி சரடையும் அறுத்துச் சென்றுள்ளனர்.

இதில் தலையில் பலத்த காயம் அடைந்த நாகதேவி மற்றும் அவரது கணவர் ஆகியோர் திருவள்ளூர் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வருகின்றனர். ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வரும் தங்களுக்கு உயிர் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்றும், கஞ்சா விற்பனை குறித்து பேசியதற்கு எங்களை தாக்கிய பழனி, தேவி மற்றும் அவர்களது குடும்பத்தைச் சேர்ந்த மூர்த்தி, அம்பிகா, சச்சின், ரோஸ், முனியம்மாள், வளர்மதி சக்தி ஆகியோர் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பாதிக்கப்பட்டவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# வீடு வீடாக பாத்திரம் வினியோகித்த தவெகவினர்: திருச்செங்கோடு அருகே பரபரப்பு

திருச்செங்கோடு: மார்ச்.25–

திருச்செங்கோடு அருகே இரவோடு இரவாக பாத்திரம் வினியோகம் செய்த தவெகவினர் தேர்தல் பறக்கும் படையினரை பார்த்து ஓட்டம் பிடித்தனர். நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு அருகே உள்ள முரசுக்குட்டை என்ற பகுதியில், தவெகவை சேர்ந்தவர்கள் வீடு, வீடாக விஜய் மற்றும் தவெக நிர்வாகி அருண்ராஜின் ஸ்டிக்கர் ஒட்டிய ‘எவர்சில்வர்’ பாத்திரங்களை நேற்றிரவு வினியோகம் செய்து வந்தனர். இதுகுறித்து வேளாண் உதவி அதிகாரி வெற்றி வேலுக்கு தகவல் கிடைத்தது. அவரது தலைமையிலான பறக்கும் படையினர் ஜீப்பில் உடனடியாக அப்பகுதிக்கு விரைந்தனர்.

ஜீப்பை பார்த்ததும் அங்கிருந்த தவெகவினர் வீடுகளுக்கு வினியோகம் செய்யப்பட்டு வந்த பாத்திரங்கள் அடங்கிய மூட்டைகளை அங்கேயே போட்டு விட்டு ஓட்டம் பிடித்தனர். பறக்கும் படையினர் அங்கு சென்று பார்த்த போது, விஜய் ஸ்டிக்கர் ஒட்டப்பட்டிருந்த 14 எவர் சில்வர் பாத்திரங்கள் இருந்தது தெரியவந்தது. அதை கைப்பற்றி, வருவாய் கோட்டாட்சியர் லெனின் வசம் ஒப்படைக்கப்பட்டது. இதுகுறித்து புறநகர் போலீசார் வழக்குப்பதிவு செய்து பாத்திரங்கைள போட்டு விட்டு நள்ளிரவில் ஓட்டம் பிடித்த நபர்கள் குறித்து விசாரித்து வருகின்றனர்.

இருக்கும் போது
ரத்ததானம்.... இறந்த
பின் கண்தானம்
செய்வீர்...

# புதுச்சேரி மாநிலத்தின் வளர்ச்சிக்காகவும், மதச்சார்பின்மையை காக்கவும் மதச்சார்பற்ற கூட்டணியில் SDPI கட்சி ஆதரவு: மாநில அமைப்பாளர் இரா. சிவா வரவேற்பு!





புதுச்சேரி மாநிலத்தின் உரிமைகளை மீட்டெடுக்கவும், மக்களாட்சித் தத்துவத்தைப் பாது காக்கவும் தற்போதைய மக்கள் விரோத ஆட்சிக்கு எதிராக வலுவான ஒரு கூட்டணியை நாம் கட்டமைத்து வருகிறோம்.

அந்த வகையில், மதச் சார்பற்ற கொள்கைகளில் உடன்பாடு கொண்ட சோசியல் டெமாக்ரடிக் பார்ட்டி ஆப் இந்தியா (SDPI) கட்சி, எங்களது கூட்டணியில் தமிழகத்தை போல் புதுச்சேரியிலும் இணைந்து செயல்பட முன்வந்துள்ளதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

புதுச்சேரியின் தனித்தன்மையையும், சமூக நல்லிணக்கத்தையும் சீர்குலைக்க நினைக்கும் பாசிச சக்திகளை முறியடிக்க ஜனநாயக சக்திகள் அனைத்தும் ஒன்றிணைய வேண்டியது காலத்தின் கட்டாயம்.

SDPI கட்சியின் இந்த வருகை, புதுச்சேரி சிறுபான்மை மற்றும் அணைத்து சமூக மக்களின் நலனுக்காக நாம் முன்னெடுத்து வரும் போராட்டங்களுக்கு கூடுதல் பலத்தை அளிக்கும். வரும் காலங்களில், மாநில அந்தஸ்து, இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு மற்றும் அடித்தட்டு மக்களின் வாழ்வாதாரப் பிரச்சனைகளுக்காக இக்கூட்டணி ஒருங்கிணைந்து வீரியத்துடன் களமிறங்கும் என்பதை உறுதிபடத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421